**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.149/2025 |
| Deposition of witness for Prosecution | : | P.W- 2 |
| Name | : | சுடலைமணி, வயது 35 |
| Father Name/Husband Name | : | சண்முகநாதன் |
| Village | : | புதுகிராமம் |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | லோடுமேன் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 9th day of July 2025.

**(A1-A3 absent. 317 Crpc petiton filed and allowed. A4, A5 present).**

<u>முதல் விசாரணை</u>

1. நான் புதுகிராமத்தில் வசித்து லோடுமேன் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் இல்லாத எதிரிகளையும் எனக்கு தெரியும். அ.சா.1 எனது மனைவி. 2024 ஆம் வருடம் பாண்டி என்பவரிடம் எனது கணவரின் passion pro இருச்சக்கர வாகனத்தை அடகு வைத்து அதற்கு ரூ. 3000 கடனாக பெற்று கொண்டேன். என்னிடம் பாண்டி காசு கேட்டபோது அவருக்கு ரூ4000 கொடுத்தேன். ரூபாயை பெற்றுக்கொண்டு பாண்டி வண்டியை தரவில்லை. பாண்டியிடம் எனது ஓனர் மாரியப்பன் என்பவர் வண்டியை தரதது சம்பந்தமாக பேசியுள்ளார். 20.02.2024 ஆம் தேதி நான் வீட்டில் இருந்தபோது சக்தி கணேஷ் என்பவர் எனது மனைவியை பாண்டி குடும்பத்தை சேர்ந்த 5 நபர்கள் கலைஞர் படிப்பகம் அருகே வயிற்றில் உதைத்தும், அடித்தும் காயப்படுத்தியதாக தகவல் சொன்னார். நான் சம்பவ இடம் சென்று காயம்பட்ட எனது மனைவியை கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வந்தேன். அங்கு அ.சா.1 சிகிச்சை எடுத்துக் கொண்டார். சிகிச்சையில் இருந்தபோது விசாரித்த போலீசார் நடந்தவற்றிற்கு நடவடிக்கை எடுக்க புகார் வாக்குமூலம் கொடுத்தார். அந்த புகார் வாக்குமூலத்தில் நான் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2. எதிரி தரப்பிற்கு குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை என்பதால் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.